JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 312/2018 |
| | : | Prosecution P.W –3 |
| NAME | : | Mariappan |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 08.06.2022.

முதல் விசாரணை

நான் குறும்பலபேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி மாதவனை தெரியும். கடந்த 08.10.2017 ம் தேதியன்று மாலை 03.00 மணிக்கு நானும் எனக்கு தெரிந்த நளன் என்ற பையனுடன் கீழப்பாவூர் பஸ்ஸ்டாண்டில் வைத்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி மாதவன் எங்கள் அருகில் நின்றுக்கொண்டிருந்தார். அங்கு அப்போது பாவூர்சத்திரம் போலிசார் வந்தவுடன் எதிரி மாதவன் அங்கியிருந்து ஓட பார்த்தார். அப்போது போலிசார் எதிரி மாதவனை மடக்கி பிடித்து போலிசார் அவரை விசாரித்த போது எதிரி மாதவன் குத்தாலிங்கத்தை அரிவாள் வைத்து மிரட்டி அவர் பையில் இருந்த ரூபாய் மூன்னூறுயை எடுத்துக்கொண்டு குத்தாலிங்கத்தை மிரட்டியதாக போலிசாரிடம் சொன்னார். இரவில் தோப்பில் தங்கிவிட்டு காலையில் வெளியூர் செல்வதாக இருந்தேன். அதற்குதான் பஸ்ஸ்டாண்டிற்கு வந்தேன், எதிரி கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் எழுதிக்கொண்டார்கள்.அதிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. அப்போது ரூபாய் 300 யை சட்டப்பையில் இருந்து எதிரி மாதவன் எடுத்து போலிசாரிடம் ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை போலிசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி அ.சா.ஆ,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலிசார் அரிவாளை பற்றி கேட்ட போது அதற்கு எதிரி அரிவாளை அவரது வீட்டிற்கு பின்னால் பூஞ்செடிக்கு அருகில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். அதன் பின்பு எதிரி மாதவன் வீட்டிற்கு சென்ற போது எதிரி மாதவன் மறைத்து வைத்திருந்த கோழிவால் அரிவாளை எடுத்து போலிசாரிடம் ஆஜர் செய்தார். போலிசார் அதை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அரிவாளை கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ. 4 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).